**Minutes of Public Hearing held on 28.12.2023 at 10.30 A.M. held in Balasubramaniam Hall, Krishnapuram Main road, kadayanallur Taluk, Tenkasi District with respect to the project of Thiru. V.Maripandi, Rough Stone, Jelly & Gravel Quarry, over an extent of 2.23.0 Ha in S.F. 155/3, 155/8B, 155/11, 155/13, 155/14, 155/15 & 155/16 of Kampaneri Puthukudi-I Village, Kadayanallur Taluk, Tirunelveli District (Now Tenkasi District).**

**Details of participants in this meeting**

| | | |
|---|---|---|
| Tmt. A.N. Lavanya | : | Revenue Divisional Officer, Tenkasi, Tenkasi District. |
| Tmt. C. Suyambu Thangarani | : | District Environmental Engineer, TNPC Board, Tiruneveli. |
| Public and Government Officials | : | Details are attached (Annexure-1) |

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli, welcomed the Revenue Divisional Officer, Tenkasi, who came to preside over the public consultation, the public, industry representatives and police officials.

The Revenue Divisional Officer, Tenkasi, who was presiding over the meeting requested the public to express their opinions about the project in a peaceful manner, and informed that public views would be recorded and sent to the government.

The Project Consultant of Thiru. V.Maripandi, Rough Stone, Jelly & Gravel Quarry, Company explained in detail about the project to the public through a Power Point Presentation.

After that, Revenue Divisional Officer, Tenkasi, said that the project details have been explained to the public in detail and requested the public to express their opinion about this stone quarry project verbally or in writing.

After that, the public started expressing their views which are as follows:

**1. Mrs. Prabhavathy, Sundaresapuram:-**

She said that our town will get job opportunity due to this stone quarry.

**2. Mr. Rajender, Kampaneri Panchayat, Valasai Village:-**

He said that he is very happy that this consultation meeting is coming because this quarry is coming as a source of livelihood for the people of four villages namely Kambaneri Panchayat, Bokanur Panchayat and Pudukudi Panchayat. I am one of those people who have migrated to neighboring states like Kerala, Karnataka, Tamilnadu for work due to lack of this stone quarry. I know the rock industry very well. For almost 5 years, all the common people are living very hard due to non-existence of this stone quarry. Because we are very happy for this quarry to come.

**3. Mrs. Periyathai, Sundarareshapuram:-**

She informed that, there is no quarry in our town, Maripandi said that we will get employment as they are trying.

**4. Mr. Anandarai, Pudukudi village.**

He said that I have two trucks and two people working for me. Agriculture is important in our area. If you look at it now, there is no job opportunity for the people there. The person who spoke before me also said that everyone migrates to many places for job opportunities and leaves for work. If this quarry comes, 4 villages in the surrounding area will get employment opportunities for almost 100 to 200 people and it will also be useful for me. I have two cabs, I have drivers who trust me and some workers who trust me. Now if you look at the Thirumangalam to Kollam highway work is going on. It will be very useful for us if this quarry comes at this time. He said that he welcomes this project.

**5. Mr. Mahesh, Poganallur Panchayat:-**

He informed that, there are 1480 people in our town. We don't have any job opportunities. Half of them will go to the job they found, they have their own business and daily wages for 800 people. If this quarry comes, it will be a first example for our village. He said that we are very happy because this quarry is coming.

**6. Mrs. Selvarani, Sundareshapuram:-**

She said if this quarry comes it will be good for us.

**7. Mr. Ramesh, Advocate:-**

He said that, there are a lot of good things about this quarry coming up. Especially job opportunities will be more. There will be employment opportunities for the auto industry around here and there will be a lot of development work due to the coming of this company. He said that he would support this quarry on behalf of the Congress party as it would provide necessary materials for construction works in the surrounding area.

**8. Mrs. Jayalakshmi, Boganallur Village:-**

She said that many people are unemployed in our town, so there is no obstacle due to the coming of this quarry.

**9. Mr. Arulraj, Rameswaram Village:-**

He said that, there are three benefits by this quarry. One is people will get employment through this quarry. Second is those water bodies can be used for agriculture. Apart from that, saplings can be planted all around with those water source.

**10. Mr. Palanivel, Sundareshapuram:-**

He told, I have my own transport. If you look locally, there is not much material needed for construction anywhere. So if the quarry is started, not only the stone, but also if the crusher is started, the situation where M-sand and gravel will be crushed. All the

things people need are easily available. Also the price is high. Therefore, if there are lots of quarries and crushers, the price can be reduced. He said that this will create a lot of job opportunities for the carpenters and construction workers.

**11. Mr. Kannan, Pokanallur Village:-**

He requested to open this quarry as it would provide employment to many people.

10.1.24

| | |
|---|---|
| **District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tirunelveli** | **Revenue Divisional Officer,<br>Tenkasi** |

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கம்பனேரி புதுக்குடி-I கிராமம், புல எண்கள்: 155/3, 155/8B, 155/11, 155/13, 155/14, 155/15 மற்றும் 155/16 , விஸ்தீரனம் 2.23.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். திரு. மாரிப்பாண்டி ரப் ஸ்டோன், மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்டம் குறித்து 28.12.2023 அன்று காலை 10.30 மணியளவில், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணாபுரம் மெயின் ரோடு, பாலசுப்பிரமணியம் ஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நிகழ்வின் சுருக்கம்

இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்

1. திருமதி. A.N. லாவன்யா - வருவாய் கோட்டாட்சியர் தென்காசி, தென்காசி மாவட்டம்.
2. திருமதி. செ. சுயம்பு தங்கராணி - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி.
3. பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் - விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

******

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்களையும், பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். அதன் பின்னர் வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்களை தலைமையுரை ஆற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் தலைமையுரையாற்றிய வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்கள், கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்களை வரவேற்று, பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த எடுத்துரைத்து, திட்டம் குறித்தான பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை அமைதியான முறையில் ஒருவர் பின் ஒருவராக தெரிவிக்குமாறும், அவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதன்படி தொடர்ந்து தி/ள் திரு. மாரிப்பாண்டி ரப் ஸ்டோன், மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் திட்ட ஆலோசகரால் திட்டம் பற்றிய விளக்கங்கள் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியர், தென்காசி அவர்கள், இத்திட்டம் குறித்த விளக்கத்தினை திட்ட நிறுவனம் சார்பில், பொதுமக்களுக்கு விபரமாக விளக்கப்பட்டுள்ளதாகவும், எனவே பொதுமக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

1. திருமதி. பிரபாவதி, சுந்தரேசபுரம்:-

எங்கள் ஊருக்கு கல் குவாரியினால் வேலை வாய்ப்பு வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

2. திரு. P. ராஜேந்தர், கம்பனேரி பஞ்சாயத்து, வலசை கிராமம்:-

இந்த கருத்துக் கேட்பு கூட்டம் என்பது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது ஏனென்றால் கம்பனேரி பஞ்சாயத்து, போகனூர் பஞ்சாயத்து, புதுக்குடி பஞ்சாயத்து இப்படி நான்கு கிராம மக்களுக்கு ஒரு வாழ்வாதாரமாக இந்த குவாரி வருவது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஏனென்றால் இந்த கல் குவாரி இல்லாத காரணத்தினால் இந்த அனைத்து கிராம மக்களும் அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு இது போன்ற நகரங்களுக்கு வேலைக்கு புலம்பெயர்ந்து சென்றவர்களில் நானும் ஒருவன். எனக்கு வேலை இல்லாத காரணத்தினால் நான் ட்ரில்லிங் அருமையாக செய்வேன். பாறைத் தொழில் எனக்கு அருமையாக தெரியும். கிட்டத்தட்ட 5 ஆண்டுகளாக, இந்த கல் குவாரி இல்லாத காரணத்தினால் அனைத்து பொது மக்களும் மிகவும் சிரமத்தோடு வாழ்கிறார்கள். ஏனென்றால் இந்த குவாரி வருவதற்கு எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது என்பதாக தெரிவித்தார்.

3. திருமதி. பெரியத்தாய், சுந்தரரேசபுரம்:-

எங்கள் ஊரில் குவாரி இல்லை, மாரிப்பாண்டி அவர்கள் முயற்சி செய்வதால் எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என கூறினார்.

4. திரு. ஆனந்தராஜ், புதுக்குடி கிராமம்.

நான்இரண்டு லாரி வைத்திருக்கிறேன் என்கிட்ட இரண்டு பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் விவசாயம் தான் முக்கியமானது. இப்ப பார்த்தால் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது. எனக்கு முன்னாடி பேசினவர் கூட சொன்னார் எல்லாரும் நிறைய இடத்துக்கு வேலை வாய்ப்புக்காக புலம்பெயர்ந்து தொழிலுக்காக சென்று விடுகிறார்கள். இந்த கல்குவாரி வந்தால் சுற்று வட்டாரத்தில் இருக்கும் 4 கிராமங்களுக்கு கிட்டத்தட்ட 100 முதல் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், எனக்கும் பயனுள்ளதாக இருக்கும். நான் இரண்டு வண்டி வைத்திருக்கிறேன், திருமங்கலத்திலிருந்து கொல்லம் நெடுஞ்சாலை வேலை நடந்துக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் கல்குவாரி வந்தால் எங்களுக்கு ரொம்ப பயனுள்ளதாக இருக்கும் என்று கூறி திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

5. திரு. மகேஷ், போகநல்லூர் பஞ்சாயத்து:-

எங்கள் ஊரில் 1480 நபர் இருக்கிறோம். எங்களுக்கு வேலை வாய்ப்பு எதுவும் கிடையாது. பாதிபேர் கிடைத்த வேலைக்கு போவார்கள், சொந்த தொழில் இருக்கு அதுபோக 800 நபர்களுக்கு அன்றாட கூலி. இந்த குவாரி வந்தால் எங்கள் கிராமத்துக்கு வாழ்வாதாரமாக, முன் உதாரணமாக இருக்கும். இந்த குவாரி வருவதினால் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம் என கூறினார்.

6. திருமதி. செல்வராணி, சுந்தரரேசபுரம்:-

எங்கள் வீட்டுலையும் இரண்டு வண்டி இருக்கிறது. இந்த குவாரி வந்தால் எங்களுக்கு நன்றாக இருக்கும் என கூறினார்.

7. திரு. ரமேஷ், வழக்கறிஞர்:-

இந்த குவாரி வருவதினால் அநேக நல்ல விஷயம் இருப்பதாகவும் குறிப்பாக வேலை வாய்ப்பு அதிகமாக வரும், இங்கு சுற்றி இருக்கும் வாகன முதலாளிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் மற்றும் இந்த நிறுவனம் வருவதினால் நிறைய வளர்ச்சி பணிகள் இருக்கும். சுற்று வட்டார கட்டுமான

பணிகளுக்கு தேவையான பொருட்கள் கிடைக்கும் என்பதால் இந்த குவாரிக்கு நானும், காங்கிரஸ் கட்சி சார்பாக ஆதரவு தெரிவிப்பதாக கூறினார்.

8. திருமதி. ஜெயலெட்சுமி, போகநல்லூர் கிராமம்:-

எங்கள் ஊரில் நிறைய ஆட்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள், அதனால் இந்த குவாரி வருவதினால் எந்த தடையும் கிடையாது என கூறினார்.

9. திரு. அருள்ராஜ், ராமேஸ்வரம் கிராமம்:-

இந்த குவாரி வருவதால் மூன்று விஷயம் இருக்கு. ஒன்று இந்த குவாரி மூலமாக வேலை கிடைக்கும். இரண்டாவது அந்த நீர்நிலைகளை விவசாயத்துக்கு பயன்படுத்தலாம். அதுமட்டுமல்லாமல் அந்த நீர் நிலைகள் வைத்து சுற்றி உள்ள எல்லா பக்கமும் மரக்கன்றுகள் நடலாம் என கூறினார்.

10. திரு. பழனிவேல், சுந்தரேசபுரம்:-

நான் சொந்தமாக டிரான்ஸ்போர்ட் வைத்திருக்கிறேன். இப்ப உள்ளூரில் பார்த்தால் கட்டுமானத்துக்கு தேவையான பொருட்கள் அதிகமாக இல்லை. எனவே கல்குவாரி ஆரம்பித்தால் கல் மட்டும் இல்லாமல், அதோடு கிரஷர் ஆரம்பித்தால் எம்-சாண்ட், ஜல்லி எல்லாம் அளிக்கிற சூழ்நிலை அமையும். மக்களுக்கு தேவையான பொருட்கள் எல்லாம் சுலபமாக கிடைக்கும். அதுபோல விலை எல்லாம் அதிகமாகவே இருக்கிறது. எனவே, நிறைய கல்குவாரி, கிரஷர் அமைந்தால் விலையும் குறையும். இதனால் ஓட்டுநர்களுக்கும், கட்டுமான தொழிலாளர்களுக்கும் நிறைய வேலை வாய்ப்பு உண்டாகும் என கூறினார்.

11. திரு. கண்ணன், போகநல்லூர் கிராமம்:-

இந்த குவாரி திறப்பதினால் நிறைய பேருக்கு வேலை கிடைப்பதினால் இந்த குவாரியை திறக்கும்படி அன்போடு கேட்டுக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

வருவாய் கோட்டாட்சியர்,
தென்காசி.

10/1/24.